## திருப்பூரில் ஆடி கிருத்திகை

# முருகன் கோயில்களில் சிறப்பு வழிபாடு



▶ திருப்பூர் வாவிபாளையம் கல்யாண சுப்பிரமணியர் கோயிலில் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த முருகன்.

**திருப்பூர், ஆக. 17:** தமிழ் மாதங்களில் வருகின்ற கிருத்திகை நாட்களில் முருகன் கோயில்களில் விசேஷ வழிபாடு நடத்தப்படுவது வழக்கம்.

அதிலும் ஆடி கிருத்திகை மிகவும் விசேஷமான நாளாக கருதப்படுகிறது. ஆடி கிருத்திகை நாளான நேற்று திருப்பூர் மாநகரப் பகுதிகளில் உள்ள முருகன் கோயில்களில் விசேஷ பூஜைகள் நடத்தப்பட்டது. திருப்பூர் வாவிபாளையம் பகுதியில் உள்ள கல்யாண சுப்பிரமணியர் கோயிலில் பல்வேறு வண்ண மலர்களால் சுவாமிக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. இதனை முன்னிட்டு மாநகரின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். இதேபோல் கொங்கணகிரி கந்தப்பெருமான் கோயில், பாரதிநகர் ஸ்ரீ சிங்காரவடிவேலர் திருக்கோயில், ஊத்துக்குளி கதித்தமலை முருகன் கோயில் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள கோயில்களிலும் சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டது.

## வாக்குத் திருட்டை நிறுத்து

# இளைஞர் காங். போஸ்டர் ஒட்டி பிரசாரம்




▶ திருப்பூர் காமராஜர் சாலை மத்திய பேருந்து நிலையம் அருகே இளைஞர் காங்கிரஸ் சார்பில் ஒட்டப்பட்டுள்ள போஸ்டர்கள்.

**திருப்பூர், ஆக. 17:** மத்திய தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியலில் குளறுபடி ஏற்படுத்தியது குறித்து நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவருமான ராகுல் காந்தி ஆதாரங்களுடன் எதிர்க்கட்சிகளிடம் விளக்கம் ஏற்படுத்தினார்.


இதனைத்தொடர்ந்து காங்கிரஸ் கட்சி தலைமையில் நாடு முழுவதும் எதிர்க்கட்சியினர் தேர்தல் ஆணையத்தின் உதவியுடன் பாரதிய ஜனதா கட்சி வாக்குத்திருட்டில் ஈடுபட்டிருப்பதாக பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறனர். இதனை பொதுமக்கள் மத்தியில் கொண்டுசெல்லும் வகையில் காங்கிரஸ் கட்சியினர் பல்வேறு பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக திருப்பூர் மாநகரப் பகுதிகளில் திருப்பூர் மாநகர இளைஞர் காங்கிரசார் ‘வாக்குத் திருட்டை நிறுத்து’ என்ற தலைப்பிலான போஸ்டர்களை அச்சடித்து திருப்பூர் மாநகரில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் சுவரொட்டிகளாக ஒட்டி பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

## அணைகளின் நீர்மட்டம்



| அணை | மொத்த கொள்ளளவு | நீர்மட்டம் அடி | நீர் வரத்து கன அடி | வெளியேற்றம் கனஅடி |
|---|---|---|---|---|
| சோலையார் | 160 அடி | 161.77 | 4060.30 | 2572.71 |
| பரம்பிக்குளம் | 72 அடி | 71.61 | 4695 | 4855 |
| ஆழியார் | 120 அடி | 119.00 | 832 | 630 |
| திருமூர்த்தி | 60 அடி | 48.92 | 963 | 1037 |
| அமராவதி | 90 அடி | 88.29 | 1454 | 1287 |

## காங்கயம் கொப்பரை மார்க்கெட்



| | |
|---|---|
| கொப்பரை சாதா (கிலோ) | ரூ.212 |
| கொப்பரை ஸ்பெசல் | ரூ.215 |
| தேங்காய் பவுடர் | ரூ.225 |
| தேங்காய் எண்ணெய் (15 கிலோ டின்) | ரூ.4,950 |
| தேங்காய் (டன்) | ரூ.52,000 |
| கருப்பு தேங்காய் | ரூ.54,000 |
| தேங்காய் தொட்டி | ரூ.25,000 |

# வஞ்சியம்மன் கோயிலில் 108 திருவிளக்கு பூஜை



▶ திருவிளக்கு பூஜையில் பங்கேற்ற பெண்கள்.

**திருப்பூர், ஆக. 17:** திருப்பூர் விஜயாபுரம் அருகே உள்ள சென்னிமலைபாளையம் வஞ்சியம்மன் திருக்கோயிலில் 108 திருவிளக்கு பூஜை நடைபெற்றது. இதனை முன்னிட்டு கணபதி வழிபாட்டுடன் 108 திருவிளக்கு பூஜை நடைபெற்றது. இதில் ஏராளமான பெண்கள் கலந்துகொண்டனர். இதனைத்தொடர்ந்து உற்சவர் அன்னை ஸ்ரீவஞ்சியம்மனுக்கு மகா தீபாராதனை நடந்தது. மேலும், அன்னதானமும் வழங்கப்பட்டது.

## உரிமம் பெறாமல் இயங்கும்

# மனநல மையங்கள் மீது நடவடிக்கை

### கலெக்டர் எச்சரிக்கை

**திருப்பூர், ஆக. 17:** திருப்பூர் மாவட்ட கலெக்டர் மனிஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மாவட்டம் முழுவதும் மனநல மருத்துவமனைகள், போதை மீட்பு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்கள், மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு மையங்கள், போதை பயன்பாட்டிற்கு ஆளானவர்களுக்கான மறுவாழ்வு மையங்கள் உள்ளிட்ட மனநல நிறுவனங்கள், மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய மனநல நிறுவனங்கள், மையங்கள் அனைத்தும் மனநல பராமரிப்பு சட்டத்தின் படி உரிமம் பெற மாநில மனநல ஆணையத்திடம் பதிவு செய்ய வேண்டும். திருப்பூர் மாவட்டத்தில் இவ்வாறு பதிவு பெறாமல் செயல்படும் மனநல மையங்கள் உரிய முறையில் கீழே குறிப்பிட்டுள்ள அலுவலகத்தில் பதிவுசெய்ய ஒரு மாத காலத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

அதன்படி முதன்மை செயல்அலுவலர், தமிழ்நாடு மாநில மனநல ஆணையம், அரசு மனநல காப்பக வளாகம், மேடவாக்கம் குளம் சாலை, கீழ்பாக்கம், சென்னை 600010 என்ற எண்ணுக்கு விண்ணப்பிக்க வேண்டும். மேலும், இதுதொடர்பான விவரங்களை 044 2642 0965 அல்லது tnsmha@gmail.com என்று தெரிந்துகொள்ளலாம். விண்ணப்பங்களை https://tnhealth.tn.gov.in/tngovin/dme/dme.php என்ற இணையதளத்தில் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். பதிவு செய்யப்படாமல் இயங்கும் அனைத்து மனநல மையங்கள், நிறுவனங்கள் ஒரு மாதத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும். பதிவு செய்து உரிமம் பெறாமல் இயங்கும் மனநல மையங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### பொல்லிக்காளிபாளையம் பள்ளியில் சுதந்திர தினம்

**பல்லடம், ஆக. 17:** பல்லடம் அருகேயுள்ள பொங்கலூர் ஒன்றியம் பொல்லிக்காளிபாளையம் அரசு துவக்க மற்றும் மேல்நிலைப்பள்ளியில் சுதந்திர தினவிழா மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் குணசேகரன் தலைமையில் நடந்தது. தேசியக்கொடி ஏற்றப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது. மாணவர் கலைநிகழ்ச்சி நடந்தது. பொதுத்தேர்வில் சாதித்த மாணவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. முன்னாள் மாணவர் சங்க அறக்கட்டளை தலைவர் ரத்தினசாமி, முன்னாள் ஊராட்சி தலைவர்கள் யு.எஸ்.பழனிசாமி, ரேவதி கனகராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தீரன் சின்னமலை மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் 79வது சுதந்திர தினவிழா



**திருப்பூர், ஆக. 17:** திருப்பூர், வஞ்சிபாளையம் கொங்கு வேளாளர் அறக்கட்டளையின் சார்பில் செயல்பட்டு வரும் தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 79வது சுதந்திர தினவிழா நடந்தது. விழாவுக்கு கல்லூரி தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் ரேச்சல் நான்சி பிலிப் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் டாக்டர் மோகன சௌந்தரி வரவேற்றார். சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட கல்லூரி துணைத்தலைவர் பி.முருகசாமி 79வது தேசிய கொடியை ஏற்றி வைத்து, மாணவிகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றார். சிறப்பு அழைப்பாளராக கல்லூரி நிர்வாக உறுப்பினர் காளியப்பன் கலந்துகொண்டு பேசினார். தொடர்ந்து பகவத் கீதை, அல் குரான், பைபிள் வாசகங்களை மாணவிகள் வாசித்தனர். பின்னர் சுதந்திர போராட்ட விழிப்புணர்வு மற்றும் நடன நிகழ்ச்சிகள் நடந்தது. முடிவில் கல்லூரி உடற்கல்வி ஆசிரியை ஸ்ரீபிரியங்கா நன்றி கூறினார். விழாவில் கொங்கு வேளாளர் அறக்கட்டளை செயலாளர் கீதாஞ்சலி கோவிந்தப்பன் மற்றும் அறக்கட்டளை நிர்வாகிகள் உள்பட 700க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டனர்.

# காரில் பைக் மோதி வாலிபர் பலி



**ஊதியூர் ஆக. 17:** ஊதியூர் அருகே உள்ள அமராவதி வளையம் பகுதியைச் சேர்ந்தவர் ஆசிக்ராஜா (19). ஜேசிபி வாகனம் வைத்து தொழில் செய்து வந்தார். நேற்று முன்தினம் இரவு ஆஷிக்ராஜா, தனது பைக்கில் ஓட்டலுக்கு சென்று உணவு வாங்கிவிட்டு வீடு திரும்பிக் கொண்டு இருந்தார். வீணம்பாளையம் காடையூர் ரோட்டில் மளிகை கடை அருகில் சென்றபோது, ரோட்டோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் மீது பைக் மோதி விபத்து ஏற்பட்டது. இதில் படுகாயம் அடைந்த ஆசிக்ராஜாவை, அங்கிருந்தவர்கள் மீட்டு காங்கயம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு பரிசோதனை செய்த டாக்டர், ஆஷிக்ராஜா ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தார்.

இதுகுறித்த புகாரின் பேரில் ஊதியூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சூப்பர் ஸ்டார்ஸ் மக்கள் கழகம் சார்பில்

# தொழிலாளர்களுக்கு கூலி பட டிக்கெட், உணவு வழங்கல்



▶ சூப்பர் ஸ்டார்ஸ் மக்கள் கழக பொதுச்செயலாளர் எஸ்.எஸ்.முருகேசுக்கு நிர்வாகிகள் மாலை அணிவித்து வாழ்த்து கூறினர்.

**திருப்பூர், ஆக. 17:** சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்த கூலி திரைப்படம் வெளியானதை முன்னிட்டு, சூப்பர் ஸ்டார்ஸ் மக்கள் கழகம் மற்றும் சூப்பர் ஸ்டார்ஸ் மகளிர் சேவை மையம் சார்பில் திருப்பூர் அனுப்பர்பாளையத்தில் உள்ள தியேட்டரில் பெண் தொழிலாளர்கள் மட்டும் கூலி திரைப்படத்தை இலவசமாக பார்க்கும் வகையில் சிறப்பு காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதேபோல் அவினாசி ரோடு எஸ்.ஏ.பி. சந்திப்பில் உள்ள மற்றொரு தியேட்டரில் ஆண் தொழிலாளர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் திரைப்படத்தை இலவசமாக பார்ப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அந்த 2 தியேட்டர்களிலும் காட்சிக்கு முன்பாக 1400 தொழிலாளர்களுக்கு அதற்கான டிக்கெட் மற்றும் இனிப்புடன் கூடிய காலை உணவை சூப்பர் ஸ்டார்ஸ் மக்கள் கழகத்தின் பொதுச்செயலாளர் எஸ்.எஸ்.முருகேஷ் வழங்கினார். அவருக்கு நிர்வாகிகள் மாலை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

கூலி திரைப்படம் வெற்றிபெற வேண்டி பல்வேறு இடங்களில் 7 ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இதற்கான ஏற்பாடுகளை சூப்பர் ஸ்டார்ஸ் மக்கள் கழக நிர்வாகிகள் செந்தில், ஆத்திமுத்து, பாலு, அமர்நாத், பாலசுப்பிரமணி, சுரேஷ்குமார், ராஜா, கிருஷ்ணன், ஆனந்த், சூப்பர் ஸ்டார்ஸ் மகளிர் சேவை மைய நிர்வாகிகள் தமிழரசி, கண்ணம்மாள், ராஜேஸ்வரி, மல்லிகா, பாலரேவதி, மரகதம், சுலோச்சனா மற்றும் நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் செய்திருந்தனர்.

# பல்லடத்தில் கிருஷ்ணர் ஜெயந்தி விழா



▶ பல்லடம் மகாலட்சுமி நகரில் கிருஷ்ணர் ஜெயந்தியையொட்டி, கிருஷ்ணர் சிலைக்கு அபிஷேகம் நடைபெற்றது.

**பல்லடம், ஆக. 17:** பல்லடம் மகாலட்சுமி நகரில் கிருஷ்ணர் ஜெயந்தி விழா நேற்று நடைபெற்றது. இதையொட்டி ஹரி நாம சங்கீர்த்தனம், பக்தி இன்னிசை கச்சேரி, மகா கலசாபிஷேகம், குழந்தைகள் கலை நிகழ்ச்சி, மாறுவேடப்போட்டி, ஹரி நாம அர்ச்சனை, சந்தியா ஆரத்தி ஆகியவை நடைபெற்றன. ஹரேகிருஷ்ணா பக்தி யோகா மையத்தை தமிழ்நாடு மேற்கு மற்றும் கேரளா பகுதி இஸ்கான் மண்டலசெயலாளர் பக்தி வினோத சுவாமி மகராஜ் திறந்துவைத்து பேசினார். கலைநிகழ்ச்சியில் பங்கேற்ற குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

இன்று (ஞாயிறு) காலை 11 மணி முதல் மதியம் 2 மணி வரை இஸ்கான் அமைப்பின் ஸ்தாபகர் பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதாவின் பிறந்த நாளையொட்டி ஹரி நாம சங்கீர்த்தனம், சொற்பொழிவு, சிறப்பு பூஜை, பிரசாத விருந்து ஆகியவை நடைபெறுகிறது.

# காலிப்பணியிடம் நிரப்ப வேண்டும்

### மார்க்கெட்டிங் பணியாளர்கள் தீர்மானம்

**திருப்பூர், ஆக. 17:** தமிழ்நாடு ஸ்டேட் மார்க்கெட்டிங் நிரந்தர பணியாளர்கள் சங்கத்தின் செயற்குழு கூட்டம் திருப்பூரில் நடந்தது. சங்க தலைவர் சங்கரசேகர் தலைமை தாங்கினார். பொதுச்செயலாளர் சரவணன், பொருளாளர் பாபு, இணைச்செயலாளர் பூபதி, மாநில ஒருங்கிணைப்பாளர் அண்ணாதுரை உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் தகுதியிருந்தும், காலிப்பணியிடங்கள் இருந்தும் 5 ஆண்டுகளுக்கும் மேலாக பதவி உயர்வு வழங்கப்படாத அலுவலக உதவியாளர், பதிவுறு எழுத்தர், தட்டச்சர், தொலைபேசி இயக்குபவர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகிய பணிநிலைகளுக்கு இந்த மாத இறுதிக்குள் முன் தேதியிட்டு பதவி உயர்வு வழங்க வேண்டும்,

பணிநிலைகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட தேவையான பணியிடங்கள் அடிப்படையில் உள்ள காலிப்பணியிடங்களில் அமர்த்தி பதவி உயர்வு வழங்குவதற்கு முன்பாக ஒப்பளிக்கப்பட்ட தேவையான பணியிடங்களில் திருத்தம் மேற்கொள்வதை கைவிடுமாறு நிர்வாகத்தை கேட்டுக்கொள்வது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

# மகிழ்ச்சி கருணை இல்லத்தில் 79வது சுதந்திர தினவிழா



**திருப்பூர், ஆக. 17:** திருப்பூர் மாவட்டம், குன்னத்தூர் வெள்ளிரவெளியில் செயல்பட்டு வரும் ஆதரவற்றோர் முதியோர் காப்பகமான மகிழ்ச்சி கருணை இல்லத்தில் 79வது சுதந்திர தினவிழா கொண்டாடப்பட்டது. விழாவில் திருப்பூர் பார் அசோசியேசன் துணைத்தலைவர் வக்கீல் எம்.அன்புசெல்வி தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். தொடர்ந்து முதியோர்களுக்கு சுதந்திர தின போட்டிகள் நடத்தப்பட்டு. நிறுவனர் ஜெயக்குமார் மற்றும் மாலதி ஆகியோர் பரிசுகளை வழங்கினர். பின்னர் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

# புதர்மண்டி காணப்படும் ஓடை தூர்வார வேண்டும்



▶ உடுக்கம்பாளையம்- புங்கமுத்தூர் இடையே புதர் மண்டி காணப்படும் ஓடை.

**உடுமலை, ஆக. 17:** உடுமலை ஒன்றியத்தில் ஏராளமான ஓடைகள் உள்ளன. 38 ஊராட்சிகள் உள்ளன. உடுக்கம்பாளையம்-புங்கமுத்தூர் இடையே உள்ள ஓடையில் செடி, கொடிகள் வளர்ந்து புதர்மண்டி காணப்படுகிறது. இதனை சீரமைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். ஒன்றியத்தில் புதிதாக தடுப்பணைகள் கட்டப்படுகின்றன. ஆனால் ஏற்கெனவே உள்ள ஓடை, தடுப்பணைகள் பராமரிக்கப்படாமல் புதர்மண்டி காணப்படுகின்றன.

முறையாக பராமரித்தால் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி நிலத்தடி நீர்மட்டம் உயரும். எனவே, ஓடைகளை தூர்வார வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## திருப்பூர் மாவட்டத்தில்

# பதிவு, புதுப்பித்தல் தொழிற்சாலைகள் விவரங்களை பதிவு செய்ய வேண்டும்

### அதிகாரிகள் அறிவுறுத்தல்

**திருப்பூர், ஆக. 17:** திருப்பூர் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் இணை இயக்குனர்கள் வேலுமணி, சபீனா ஆகியோர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருப்பூர் மாவட்டத்தில் பதிவு மற்றும் புதுப்பித்தல் செய்யும் தொழிற்சாலைகள் இணையதளத்தில் விவரங்களை பதிவேற்றம் செய்ய வேண்டும் என்று தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குனர்கள் தெரிவித்தனர்.

திருப்பூர் மாவட்டத்தில் தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற்சாலைகள் மற்றும் புதிதாக பதிவு செய்யும் தொழிற்சாலைகள், புதிதாக மேம்படுத்தப்பட்ட www.https//dish.tn.gov.in விவரங்களை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

தொழிற்சாலை உரிம விண்ணப்பம், உரிமம் புதுப்பித்தல், வரைபடம் ஒப்புதல், ஆண்டறிக்கைகள், ஒப்பந்த தொழிலாளர் பதிவுச்சான்று மற்றும் உரிமம் புதுப்பித்தல், வெளிமாநில தொழிலாளர்கள் பதிவுச்சான்று மற்றும் உரிமம் புதுப்பித்தல், அழுத்தக்கலன் சோதனை சான்று, மருத்துவ பரிசோதனை சான்று போன்ற அனைத்து சேவைகளுக்கும் இந்த துறையின் இணையதளம் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும்.

இதற்கான அனைத்து கட்டணங்களும், இ-செலான் மூலம் செலுத்தும்முறை மாற்றம் செய்யப்பட்டு இணையதளம் மூலமாக செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. தொழிற்சாலை பெயர் மாற்றம், உரிமையாளர் மாற்றம், ஒப்பந்த தொழிலாளர் பதிவு சான்று திருத்தம், வெளிமாநில தொழிலாளர்கள் பதிவு சான்று திருத்தம் ஆகியவற்றுக்கும் இந்த துறையின் இணையதளம் மூலமாக அதற்கான கட்டணத்தை ஆதாரங்களுடன் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். தங்களது விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு இணையதளம் மூலமாக அதற்கான ஒப்புதல் அளிக்கப்படும். தொழிற்சாலை விவரங்களை பதிவேற்றம் செய்யும் போது சந்தேகம் ஏற்பட்டால் இணை இயக்குனர்-1 அலுவலகத்தை 0421 2470483 என்ற எண்ணிலும், இணை இயக்குனர்-2 அலுவலகத்தை 0421 2230688 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

